JSR IAS ACADEMY
East Tambaram

No.130/96, Bharada Madha Street, Tambaram East, Chennai – 59.

# PAPER-1
# கட்டாய தமிழ் தகுதித்தேர்வு - தமிழ் மொழியறிவு
## பிரித்து எழுதுக

1. இயல்பு புணர்ச்சி:
   1. வாழைமரம் - வாழை + மரம்
   2. பொன்வளையல் - பொன் + வளையல்
   3. தமிழ்மொழி - தமிழ் + மொழி

2. இ,ஈ,ஐ வழி யவ்வும்(ய்)
   1. கிளியழகு - கிளி + அழகு (இ)
   2. வேலையாள் - வேலை + ஆள் (ஐ)
   3. தீயெரிந்தது - தீ + எரிந்தது (ஈ)

   ஏனை உயிர்வரின் வவ்வும்(வ்)
   1. திருவருள் - திரு + அருள் (உ)
   2. பலாவிலை - பலா + இலை (ஆ)
   3. பூவரசு - பூ + அரசு (ஊ)

   ஏமுன் இவ்விருமையும் (ய்,வ்)
   1. சேயடி(ய்)
   2. சேவடி(வ்)

   } -சே + அடி

3. உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே
   1. கடலலை - கடல் + அலை
   2. தமிழன்னை - தமிழ் + அன்னை
   3. தேனாறு - தேன் + ஆறு

4. தனிக்குறில் முன் ஒற்று, உயிர்வரின் இரட்டும்
   1. நெல்லரிசி - நெல் + அரிசி

2. கல்லணை - கல் + அணை
3. விண்ணுலகம் - விண் + உலகம்

5. உயிர்வரின் உக்குறல் மெய்விட்டு ஓடும் (உ)
   1. பந்தாட்டம் - பந்து + ஆட்டம்
   2. வண்டினம் - வண்டு + இனம்
   3. மாசற்றார் - மாசு + அற்றார்

6. யவ்வரின் இய்யாம்(உ->இ)
   1. நாடியாது - நாடு + யாது
   2. குரங்கியாது - குரங்கு + யாது

7. "நெடிலோடு உயிர்த்தொடர்க்குற்றகரங்களுள் டறஒற்று இரண்டும் வேற்றுமை மிகவே"

   i. **நெடில் தொடர் குற்றியலுகரம்**
   1. நாட்டுப்பற்று- நாடு + பற்று (ட்)
   2. ஆற்றுக்கரை -ஆறு + கரை(ற்)

   ii. **உயிர்த்தொடர் குற்றியலுகரம்**
   1. வயிற்றுவலி - வயிறு + வலி
   2. கிணற்றுத்தவளை - கிணறு + தவளை

8. மென்தொடர் குற்றியலகரங்களுல் (ம்->ப்) இனவல்லின மிகல்
   1. சிலப்பதிகாரம் - சிலம்பு + அதிகாரம்
   2. செப்புக்குடம் - செம்பு + குடம்
   3. கருப்புவில் - கரும்பு + வில்
   4. இருப்பாணி - இரும்பு +ஆணி
   5. இருப்புபாதை - இரும்பு + பாதை

9. திசை புணர்ச்சி
   1. வடகிழக்கு - வடக்கு + கிழக்கு
   2. வடமேற்கு - வடக்கு + மேற்கு
   } க்,கு-நீக்கல்

   3. தென்கிழக்கு - தெற்கு + கிழக்கு
   4. தென்மேற்கு - தெற்கு + மேற்கு
   } கு-நீக்கல், ன்->ற்

### திசை +பெயர்

1. தென்குமாரி - தெற்கு + குமாரி

2. கீழ் நாடு
3. கீனாடு
4. கீழைநாடு

} - கிழக்கு + நாடு

5. மேல்நாடு
6. மேனாடு
7. மேலைநாடு

} - மேற்கு + நாடு

### 10. ஈறு போதல்(மை)

1. முதுமரம் - முதுமை + மரம்
2. அருவினை - அருமை + வினை
3. கருவிழி - கருமை + விழி

### 11. இடைஉகரம் இய்யாதல்

1. பெரியன் - பெருமை + அன்
2. கரியன் - கருமை + அன்
3. சிரியன் - சிறுமை + அன்

### 12. ஆதிநீடல்

1. பேரூர் - பெருமை + ஊர்
2. மூதூர் - முதுமை + ஊர்
3. பாசிலை - பசுமை + இலை

### 13. அடிஅகரம் ஐய்யாதல்

1. பைந்தமிழ் - பசுமை + தமிழ்
2. பைங்கூழ் - பசுமை + கூழ்
3. பைந்நிணம் - பசுமை + நிணம்

### 14. தன்ஒற்று இரட்டல்

1. சிற்றோடை - சிறுமை + ஓடை
2. வெற்றிலை - வெறுமை + இலை
3. பச்சூர் - பசுமை + ஊன்
4. சிற்றன்னை - சிறுமை + அன்னை

JSR
முயற்சி - பயிற்சி - தேர்ச்சி

15. முன்நின்ற மெய்திரிதல்

1. செந்தமிழ் - செம்மை + தமிழ்
2. செங்கடல் - செம்மை + கடல்
3. தொல்கவின் - தொன்மை + கவின்
4. சேதாம்பல் - செம்மை + தாம்பல்
5. வெந்தழல் - வெண்மை + தழல்

16. இனமிகல் (மை->ங்)

1. கருங்கூந்தல் - கருமை + கூந்தல்
2. பெருங்கன்று - பெருமை + கன்று
3. பழங்காலம் - பழமை + காலம்

17. மகர ஈற்றுப் புணர்ச்சி

1. மரவடி - மரம் + அடி
2. அறவாணை - அறம் + ஆணை
3. மரவுரி - மரம் +உரி

} ம் - நீக்கல்
வ் - தோன்றல்

4. மரக்கிளை - மரம் + கிளை
5. வட்டப்பலகை - வட்டம் + பலகை
6. கானப்பறவை - கானம் + பறவை

7. தினந்தினம் - தினம் + தினம்
8. பாடுங்குயில் - பாடும் + குயில்
9. அங்கண் - அம் + கண்

} ம் - கெட்டு
இனம் தோன்றல்

10. மரம் + வேர் - மரவேர்
11. மறம் + வேல் - மறவேல்

} ம் - கெட்டு

18. ணன வல்லினம் வரட் டறவும்

1. மட்குடம் - மண் + குடம்
2. பொற்பாதம் - பொன் + பாதம்

19. லகர, ளகர, ஈறுகள்

ல்->ற், ள்->ட்

1. கற்சிற்பம் - கல் + சிற்பம்
2. பொருட்காட்சி - பொருள் + காட்சி

ல்->ன், ள்->ண்

1. கயன்முள் - கயல் + முள்
2. அருண்மொழி - அருள் + மொழி

## 20. பூப்பெயர் புணர்ச்சி

1. பூங்கொடி - பூ + கொடி
2. பூந்தோட்டம் - பூ + தோட்டம் } இணம்
3. பூச்செடி - பூ + செடி
4. பூப்பந்து - பூ + பந்து

## 21. பல, சில புணர்ச்சி

1. பல பல / பலப்பல / பற்பல } - பல + பல
2. சிலசில / சிலச்சில / சிற்சில } - சில + சில

## 22. உயிரீற்றுப் புணர்ச்சி

1. தீப்பொறி - தீ + பொறி
2. அச்சட்டை - அ + சட்டை
3. இத்தெரு - இ + தெரு

## 23. விரிவாக பிரித்தல்

1. ஐம்பெரும் காப்பியம் - ஐந்து + பெருமை + காப்பியம்
2. ஐங்குறுநூறு - ஐந்து + குறுமை + நூறு